

# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | செப்டம்பர் 30, 2021 | புரட்சி 20 | முழக்கம் 31 | விலை: ரூ.3.00


## சென்னை கருத்தரங்கில் பேராசிரியர் ஜெயராமன் உரை

# திராவிட எதிர்ப்பாளர்களின் வரலாற்றுத் திரிபுகளுக்கு பதிலடி

***திராவிடம் பேசி, தமிழர் அடையாளத்தை பெரியாரும் திராவிட இயக்கங்களும் மறைத்து விட்டன. இது மன்னிக்க முடியாத இனத்துரோகம்; வரலாற்றுத் துரோகம் என்று தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் பெ. மணியரசன், 'நாம் தமிழர் கட்சி' ஒருங்கிணைப்பாளர் சீமான் போன்றோர் தொடர்ந்து சுமத்தி வரும் குற்றச்சாட்டுகளுக்கு சென்னையில் 19.9.2021 அன்று தமிழ்த் தேச நடுவம் சார்பில் நடந்த கருத்தரங்கில் பேசிய பலரும் வரலாற்றுபூர்வ விளக்கங்களையும் மறுப்புகளையும் தந்தனர். நிகழ்வின் இறுதியில் பேசிய பேராசிரியர் ஜெயராமன், விரிவாக ஒரு மணி நேரம் பேசினார்.***

தோழர் மணியரசன் நடத்திய 'தமிழர் கண்ணோட்டம்' இதழில், 2010, 2011இல் 'ஆரியர்-திராவிடர்-தமிழர்' குறித்து 21 தொடர் கட்டுரைகளை எழுதியவர் 'தமிழ்மண் தன்னுரிமை இயக்கப்' பேராசிரியர் ஜெயராமன். அந்தக் கட்டுரைத் தொடரில் திராவிடம் என்பதே ஆரியம் தான் என்ற கருத்து முன் வைக்கப்பட்டிருந்தது. அந்த கருத்துகளை அப்படியே மேடைதோறும் பெ. மணியரசன், சீமான் போன்றோர் தொடர்ந்து பேசி வருகிறார்கள். கருத்தரங்கில் பேசிய பேராசிரியர் ஜெயராமன், தனது கட்டுரைத் தொடர் குறித்து ஒரு விளக்கத்தை அளித்தார்.

"1856க்கு முன்பு 'திராவிடர்' என்ற சொல் அந்த அர்த்தத்தில் புரிந்து கொள்ளப்பட்டிருந்தது என்பதை மட்டும் அத்தொடரில் விளக்கியிருந்தேன். 1856இல் கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூல் எழுதுவதற்கு முன்பு, திராவிடர் என்ற சொல் அந்த அர்த்தத்தில் பயன்படுத்தப் பட்டது. அந்த நூல் வெளி வந்த பிறகு அந்த 'சொல்' என்னவாக மாறியது என்பதையும் நான் எழுதியிருந்தேன். வடநாட்டிலிந்து தென்னகத்துக்கு வந்த 'பிராமணர்கள்', 'திராவிட பிராமணர்கள்' என்று பெயர் சூட்டப்பட்டார்கள். தென்னாடு வந்த அவர்கள் பிராமண சடங்குகள், ஆச்சாரங்களை மதித்து செயல்படாத காரணத்தால், 'பிராமணர்' என்ற உயர் பிறப்பு நிலையிலிருந்து 'கீழே இறங்கியவர்கள்' என்ற அர்த்தத்தில் 'திராவிட பிராமணர்கள்' என்று அழைக்கப்பட்டார்கள். சமஸ்கிருத இலக்கியங்கள் அப்படித்தான் பெயர் சூட்டின.

அப்படி பிராமண சடங்குகளை மதிக்காமல் தென்னாட்டில் குடியேறி வாழ்ந்தவர்களை 'விரிஷாலா' என்று மனு சாஸ்திரம் இழிவாகக் கூறியது. 'விரிஷாலா' என்றால் 'தகுதி இறக்கம் பெற்றவர்கள்' என்று அர்த்தம். இந்தச் சொல்லுக்கு 'சூத்திரர்' என்று பிறகு மொழி பெயர்ப்பு செய்தார்கள். கிரிக்கெட் விளையாட்டுக்காரரான பார்ப்பனர் ராகுல் பெயருக்குப் பின்னால் 'திராவிட்' என்ற சொல் ஒட்டியது, இந்தக் காரணத்தினால் தான். 'தமிழர் கண்ணோட்டம்' இதழில் நான் எழுதிய பத்தாவது தொடரிலேயே இதை விளக்கியிருக்கிறேன். ஆனால் திராவிடம் என்றாலே பார்ப்பனியம் தான் என்று திரித்து, அதற்குச் சான்றாக, 'ராகுல் திராவிட்' என்ற உதாரணத்தை மீண்டும் மீண்டும் பேசி வருகிறார்கள்.

1947ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியத்திலும் தென்னிந்தியாவில் குடியேறி, சடங்குகளை முறையாக செய்யாத 'பிராமணர்கள்', திராவிடர் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டதாக எழுதியிருப்பதையும் நான் அந்தக் கட்டுரையில் எடுத்துக் காட்டியிருக்கிறேன். கால்டுவெல் நூல் வந்ததற்குப் பிறகு 'திராவிடர்' சொல்லின் அர்த்தம் முழுமையாக மாறியது. இதைப் பற்றி விரிவாக எழுதினால் தான் அந்த வரலாறு முழுமை பெறும் என்பதால் 'தமிழர் கண்ணோட்ட'த்தில் வெளி வந்த அந்தத் தொடரை நான் நூலாக இதுவரை வெளியிட வில்லை. நான் ஒரு வரலாற்று ஆசிரியன் என்ற முறையில் 'அரைகுறையாக' நூல் வருவதை விரும்பாதவன். 21 தொடர்களோடு நான் 10 ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்தி விட்டேன். அது முழுமை பெறாத தொடர்" என்று விளக்கினார் பேராசிரியர் ஜெயராமன்.

'பார்ப்பனரல்லாதார்' என்பதைக் குறிக்கும் சொல்லாக பெரியார் 'திராவிடர்' என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்தார். இந்த சொல்லைப் பயன்படுத்தா விட்டால் 'சூத்திரர் கழகம்' என்று பெயர் வைத்திருப்பேன் என்று பெரியார் விளக்கமளித்துள்ளதை பேராசிரியர் சுட்டிக் காட்டினார்.



'திராவிடர்' என்ற சொல்லை பெரியார் தான் முதலில் பயன் படுத்தினாரா? என்ற கேள்வியை எழுப்பிய பேராசிரியர், அதற்கு முன் அந்தச் சொல் பயன்படுத்தப்பட்ட வர லாற்றை விளக்கினார்.

- 1881இல் அயோத்திதாசர், மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 'ஜாதியில்லாத திராவிடர்கள்' என்று பதிவு செய்யுமாறு ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.
- 1912இல் நீதிக்கட்சித் தலைவர் டாக்டர் நடேசனார், 'சென்னை அய்க்கிய சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கி, பிறகு 1913இல் திராவிடர் சங்கமாக பெயர் மாற்றம் செய்வதற்கு முன்பே அயோத்திதாசர் 'திராவிடர்' என்ற அடையாளத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.
- கால்டுவெல் ஆய்வுக்குப் பிறகு, 'திராவிடத் தீபிகை', 'திராவிட வர்த்தமானி' என்ற பத்திரிகைகள் வெளி வந்திருக்கின்றன.
- அயோத்திதாசரும், ரெவரன்ட் ஜான் ரத்தினமும் சேர்ந்து 1885இல் 'திராவிடர் கழகம்' என்ற அமைப்பை உருவாக்கி, 'திராவிடப் பாண்டியன்' என்ற பத்திரிகையையும் தொடங்கினார்கள். 1856இல் 'திராவிட ரஞ்சினி', 'திராவிட மஞ்சரி' என்ற இரண்டு பத்திரிகைகள் வருகின்றன. அப்படி என்ன 'திராவிடம்' என்ற சொல் மீது அவ்வளவு ஈர்ப்பு? ஆரியத்துக்கு எதிராக, 'கூர் தீட்டும் வாள்' என்று அந்த சொல்லைக் கருதி ஏற்றனர். அந்தச் சொல்லுக்குள் 'சமூக விடுதலை' அடங்கியிருப்பதாகக் கருதினர்" என்றார் பேராசிரியர்.

நீதிக்கட்சி மீது வைக்கப்படும் மற்றொரு குற்றச்சாட்டுக்கு பேராசிரியர் விளக்கமளித்தார். ஆங்கிலத்தில் தொடங்கிய பத்திரிகைக்கு 'ஜஸ்டிஸ்' என்று பெயர் வைத்துவிட்டு, பாழாய்ப்போன தமிழினத்தின்மீது 'திராவிடன்' பத்திரிகையைத் திணித்தார்கள் என்கிறார்கள். தலைவர்களாக வளர்ந்த பிறகு வரலாற்றை முழுமையாகப் படிக்க வேண்டும்; வரலாற்றுத் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்; 'அரியர்ஸ்' வைக்கக் கூடாது; 'திராவிடர்' இதழுக்கு ஏன் அந்தப் பெயர் சூட்டப்பட்டது? 1.6.1917 அன்று நீதிக்கட்சி திராவிடன் இதழைத் தொடங்குகிறது. இதழ் தொடங்குவதற்கு முன்பு பெயர் சூட்டுவது குறித்து மூன்று நாட்கள் விவாதம் நடக்கிறது. பார்ப்பனரைத் தவிர்த்து, அனைத்து பார்ப்பனரல்லாதாரையும் உள்ளடக்கியதாக அந்தப் பெயர் இருக்க வேண்டும் என்று முடிவுக்கு வந்து, 'திராவிடர்' என்ற அனைத்து மக்களையும் அடையாளப்படுத்தும் சொல்லாக தேர்வு செய்தனர். உண்மை இவ்வாறு இருக்க தமிழர்களை அடையாளப்படுத்த 'திராவிடன்' என்ற சொல்லை தேர்ந்தெடுத்ததாக வரலாற்றைத் திரிக்கிறார்கள் என்று விளக்கமளித்தார்.

தொடர்ந்து பேசுகையில், நீதிக்கட்சி தொடங்கப்பட்ட காலத்தில் சமூக நிலை எப்படி இருந்தது என்பதை விவரித்தார்.

"நீதிக்கட்சி தொடங்கப்பட காலகட்டத்தை தற்போதைய இளைஞர்கள் அறியமாட்டார்கள். நீதிக்கட்சியை தொடங்கியவர்களில் ஒருவரான டி.எம்.நாயர். அவர் புகழ்பெற்ற மருத்துவர். டி.எம். நாயரின் புகழ்பெற்ற பேச்சு சென்னையில் 'ஸ்பர்டேங்' பேச்சு. அதில், அனைவரையும் பார்த்து கேட்கிறார், 'இதோ நான் நிற்கிறேன், என் உடலில் என் தந்தையின் இரத்தம் தான் ஓடுகிறது என்று கூற முடியாது. பொலிகாளைகளைப் போல அலைந்தார்கள் நம்பூதிரி பார்ப்பனர்கள்.' யார் வீட்டில் வேண்டுமானாலும் நம்பூதிரிகள் நுழைவார்கள். பெண்களோடு உடல் உறவு கொள்ளும் உரிமை அவர்களிடம் இருந்தது. வீட்டிற்கு வெளியே நம்பூதிரிகள் செருப்பை கழட்டி விட்டு உள்ளே போனால், செருப்பினிடத்திலேயே கையை கட்டிக் கொண்டு பவ்வியமாக அந்த பெண்ணின் கணவர் நிற்க வேண்டும்.

வ.உ.சிதம்பரனார் இதே சென்னையில் ஓரிடத்தில் பேசும்போது ஒரு கருத்தைப் பதிவு செய்கிறார், "முன்பெல்லாம் 'தி இந்து' அலுவலகத்திற்கு போனால், 'வாடா சிதம்பரம்' என்பாராம் கஸ்தூரி ரங்க அய்யங்கார். நீதிக்கட்சி தொடங்கிய பின் நான் போனேன், 'வாங்கோ சிதம்பரம் பிள்ளைவால் சவுக்கியமா' என்றாராம் கஸ்தூரிரங்க அய்யங்கார்" என்று கூறிவிட்டு சொல்கிறார், இந்த மரியாதை எனக்கு நீதிக்கட்சியினால் கிடைத்தது என்கிறார். அப்போதைய சமூக இழிவை துடைத்து எறிவதற்காக விளைந்தது தானே, பார்ப்பனர் அல்லாதார் இயக்கம், நீதிக்கட்சி, பெரியார் எல்லாம்.

அம்பேத்கர் எழுதுகிறார், "கல்கத்தாவில் உள்ள தெருவில் சிறுவர்கள் காலையில் ஒரு குவளை தண்ணீர் வைத்துக் கொண்டு இருப்பார்களாம். யாராவது ஒரு பார்ப்பனர் இந்த பக்கம் வந்துவிட மாட்டாரா என்று காத்திருப்பார்களாம். ஒரு பார்ப்பனர் வந்த உடனேயே மிகவும் மகிழ்ச்சியடைந்து, அந்த குவளை தண்ணீரைக் கொண்டு ஓடுவார்களாம் அந்த பார்ப்பனரிடத்தில், அவர் அந்த தண்ணீரில் காலை கழுவிக் கொடுப்பாராம். அந்த தண்ணீரை வீட்டிற்கு எடுத்துக் கொண்டு சென்று வீட்டில் உள்ளவர்கள் அந்த தண்ணீரில் கொஞ்சம் பருகிய பின் தான் அனைவரும் சாப்பிடுவார்கள்" என்கிறார். எவ்வளவு கொடுமைகள் இருந்துள்ளன என்று பாருங்கள். நான் கூறியது வங்காளத்தில்.

தமிழ்நாட்டில் புரத வண்ணார் என்று ஒரு சமூகம் இருந்தது. சில ஜாதிக்காரர்களை தொட்டால் தான் தீட்டு. சிலரை பார்த்தாலே தீட்டு. அப்படித்தான் புரத வண்ணாரும். இவர்கள் ஒரு கூடாரத்தில் பகல் முழுவதும் இருந்துவிட்டு, இரவில் தான் வெளியே வருவார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு துணியை துவைப்பவர்கள். நொய், தவிடெல்லாம் தூக்கி வீசுவார்கள். அதைச் சுட்டு சாப்பிட்டு வாழ்ந்தவர்கள் புரத வண்ணார். இன்று புரத வண்ணார்களை கண்டுபிடியுங்கள் பார்ப்போம். எவ்வளவு பெரிய சமூக மாற்றம் வந்துள்ளது. இந்த சமூக மாற்றத்தை திராவிட இயக்கம் சாதித்து கொடுத்துள்ளது. நாம் நன்றி கெட்டத்தனமாக இருக்க கூடாதல்லவா, திராவிடமும் சாதித்து கொடுத்திருக்கிறது" என்று திராவிட இயக்கத்தின் சமூகப் புரட்சியை விளக்கினார்.

(அடுத்த இதழில்)

## நாம் தமிழர் கட்சியினர் பேராசிரியர் ஜெயராமனுக்கு கொலை மிரட்டல்

*கனிம பேராசிரியர் ஜெயராமன் – திராவிட எதிர்ப்பாளர்களின் புரட்டு வாதங்களுக்கு பதிலடி தருவதை சகிக்க முடியாமல், நாம் தமிழர் கட்சியினர் அவருக்கு கொலை மிரட்டல் விடுத்து வருகிறார்கள். இது குறித்து மயிலாடுதுறை காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டுள்ளது. திராவிடர் விடுதலக் கழகம் மற்றும் எஸ்.டி.பி.அய். அமைப்பைச் சார்ந்த தோழர்கள் காவல்துறையிடம் புகார் மனுவை அளித்தனர்.*

*மயிலாடுதுறை நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர் 'தமிழன் காளிதாஸ்' 8 பேருடன் சேர்ந்து கொண்டு பேரசிரியர் ஜெயராமன் தமிழ்மண் தன்னுரிமை இயக்க செயல்பாட்டாளரான செல்வ அரசன், கடலை வணிகக் கடைக்குப் போய் பேராசிரியர் ஜெயராமனை தீர்த்துக் கட்டி விடுவோம் என்று போய் கூறு என்று மிரட்டியுள்ளனர். பேராசிரியரின் குடும்பத்து உறுப்பினர்களையும் இணையரையும் தனிப்பட்ட முறையில் இழிவாக எழுத முடியாத வார்த்தைகளால் முகநூலில் பதிவிட்டு வருகின்றனர். இது குறித்து காவல் நிலையத்தில் ஆதாரங்களுடன் புகார் தரப்பட்டுள்ளது. காவல்துறை – கொலை மிரட்டல் விடுத்தவர்களோடு பாதிக்கப்பட்ட பேராசிரியர் ஜெயராமன் மற்றும் அவரது தோழர்கள் மீதும் பொய் வழக்கு பதிவு செய்துள்ளது.*

தலையங்கம்

## ‘ஜாதி ஆணவப் படுகொலை’களைத் தடுக்க தனிச் சட்டம் தேவை

மிகவும் பிற்படுத்தப்பட்ட (வன்னியர்) சமூகத்தில் பிறந்த கண்ணகியும், பட்டியல் இனப் பிரிவில் பிறந்த முருகேசனும் ஒருவரையொருவர் விரும்பி திருமணம் செய்து கொண்டு திருமணத்தையும் சட்டபூர்வமாக பதிவு செய்து ஊரைவிட்டு வெளியேறி குடும்ப வாழ்க்கையைத் தொடங்கியப் பிறகும் ஜாதி வெறி அவர்களை வாழவிடவில்லை. 2003ஆம் ஆண்டு விருத்தாசலம் அருகே புதுக்கூரைப் பேட்டை கிராமத்தில் கண்ணகியின் உறவினர்கள் கிராமத்து சுடுகாட்டுக்கு இழுத்துப் போய் வாயிலும் மூக்கிலும் நஞ்சைத் திணித்து எரித்துப் பிணமாக்கினார்கள். இந்தக் கொடூர சம்பவத்தை 300 பேர் கொண்ட கும்பல், வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என்பது கொடுமையிலும் கொடுமை. கண்ணகியைப் பிரித்து நீங்கள் விரும்புகிறவருக்கு மணம் முடித்து விடுங்கள் என்று முருகேசன் மரணப்பிடியில் மன்றாடிய போதும் ஜாதிவெறியர்கள் காதுகளில் விழவில்லை. 18 ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்ட வழக்கில் செப்டம்பர் 24ஆம் தேதி கடலூர் மாவட்ட நீதிபதி, ஒருவருக்கு மரண தண்டனையும் 12 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

குற்றத்தை மறைக்க துணை நின்ற இரண்டு காவல் துறையினருக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ‘கண்ணகி எரிப்பே தமிழ்நாட்டின் கடைசி எரிப்பாக இருக்கட்டும்’ என்று நீதிபதி எஸ். உத்தம ராஜா தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார். தூக்குத் தண்டனைக்கு உள்ளாகியிருப்பவர், கண்ணகியின் சகோதரர் மருதுபாண்டியன். சொந்த சகோதரியையே ஜாதி வெறி பிணமாக்குகிறது. குற்றத்தில் தொடர்பே இல்லாத தலித் தோழர் முருகேசன் உறவினர்கள் மூவரையும் இணைத்து பொய் வழக்கு புனைந்ததை நீதிபதி சுட்டிக் காட்டி, அவர்களை விடுதலை செய்து, மூவருக்கும் தனித்தனியாக ரூ.2 இலட்சம் இழப்பீடு வழங்க வும் உத்தரவிட்டுள்ளார். குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் தண்டனையோடு ரூ.50,000 அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் தூக்குத் தண்டனை ஒழிய வேண்டும் என்ற நமது கருத்தில் மாற்றமில்லை; அது ஆயுள் தண்டனையாக்கப்பட வேண்டும்.

அரசியல் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமையான உயிர் வாழும் உரிமையைத் தனது பிடிக்குள் எடுத்துக் கொள்கிறது ஜாதி வெறி. ஜாதியவாதிகள் கும்பலாகக் கூடும்போது, கும்பல் கலாச்சாரத்தில் மூழ்கிய ஒவ்வொருவரும் மனிதத்தை இழந்து மிருகமாகி விடுகிறார்கள்.

ஜாதியை சமூகத்தின் கவுரவமாக மாற்றியமைத்ததன் வழியாக பார்ப்பனியம் இப்போதும் உயிர்த் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. வாழும் கிராமமும் ஜாதியத்தால் கட்டமைக்கப்படும் உறவுகளும் ஜாதிவெறிக்கு உரமூட்டுகின்றன. சமூகத்தில் புனிதமாக்கப்பட்ட மதம், சடங்கு, சாஸ்திரங்களில் ஜாதி வேர் பிடித்து நிற்கிறது. ஜாதியக் கட்டமைப்பும் அதன் மூல ஊற்றான மதம், சாஸ்திரம், ஆச்சாரம் வழியாக கட்டமைக்கப்பட்டுள்ள போலிப் புனிதங்களும் தகர்க்கப்படாதவரை இந்த வெறித்தனமான கொலைகள் அரங்கேறிக் கொண்டே இருக்கும். எனவே ஜாதிய சமூகப் பிடியிலிருந்து விலகி, சுய ஜாதி மறுப்பு அணிகள் உருவாக வேண்டும்.

தேர்தல் அரசியலில் ஜாதிப் பிரிவுகளை வாக்கு வங்கிகளாக அணி திரட்டுவதற்கு அரசியல் கட்சிகளுக்கு ‘ஜாதி’ உணர்வு கட்டாயத் தேவையாகி விட்டது. பெரியார் அதனால்தான் ஜனநாயகத்தை பார்ப்பன நாயகம் – ஜாதி நாயகம் என்றார்.

பெரும்பான்மை ஜாதி மக்கள் வாழும் பகுதியில் அதே ஜாதியைச் சார்ந்தவரை வேட்பாளராக்கக் கூடாது என்று தேர்தல் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வருவது பற்றி பரிசீலிக்க வேண்டும். ‘தமிழ்த் திருமண மய்யங்கள்’ என்ற பெயரில் மணமகள், மணமகன்கள் குறித்து தகவல்களைத் திரட்டி வைத்திருக்கும் “திருமண சேவை மய்யங்கள்” இப்போது ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்தனியே மய்யங்களை உருவாக்கிக் கொண்டு அதை தொலைக் காட்சியில் விளம்பரங்கள் செய்கின்றன. இவைகள் தடை செய்யப்பட வேண்டும்.

இந்த வழக்கில் கொல்லப்பட்ட பெண்ணுக்கு குடும்பம் சூட்டியது கண்ணகி என்ற தமிழ் அடையாளப் பெயர். தூக்குத் தண்டனைக்கு உள்ளாகி நிற்கும் கண்ணகியின் சகோதரர் பெயர் கூட தமிழ் மருதுதான். தண்டிக்கப்பட்ட காவல்துறை அதிகாரியின் பெயர் தமிழ் மறவன். இப்படித் தமிழ் பெயர், உள்ளீடற்ற அடையாளங்களாக மட்டுமே நிற்கிறது; ஜாதியற்ற தமிழர்களாக அவர்களை மாற்றவில்லை என்பதையும் பார்க்கிறோம்.

தமிழர்களுக்கான அடையாளப் பெருமை, ஜாதி ஒழிப்பிலும் சுயமரியாதையிலுமே அடங்கி இருக்கிறது என்ற கருத்தை, மக்களிடம் விதைக்க இயக்கங்கள் முன் வரவேண்டும்.

# ஜாதிவாரிக் கணக்கெடுப்பு: ஒன்றிய ஆட்சியின் இரட்டை வேடம்

மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஜாதிவாரி கணக்கெடுப்பை சேர்க்க முடியாது என்று திட்டவட்டமாக உச்சநீதிமன்றத்தில் இப்போது ஒன்றிய அரசு மனு போட்டிருக்கிறது. மகாராஷ்டிரா மாநில அரசு தங்கள் மாநிலத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஜாதிவாரி கணக்கெடுப்பையும் நடத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்திருந்தது. இதுவரை இந்த பிரச்சனையில் கருத்து ஏதும் தெரிவிக்காமல் மவுனம் சாதித்து வந்த பாரதிய ஜனதா கட்சி இப்போது உச்சநீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்து தன்னுடைய கருத்து என்ன என்பதை உலகுக்கு அறிவித்திருக்கிறது. இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் பட்டியலின, பழங்குடியின பிரிவினர் எண்ணிக்கை மட்டும் தான் எடுக்கப்படும் ஏனைய எந்த ஜாதிப் பிரிவினருடைய எண்ணிக்கையும் இதில் இடம்பெறாது அது நிர்வாக வசதியும் இல்லை அது நாட்டுக்கு ஆபத்தானது எந்த ஜாதிப் பிரிவினர் பற்றிய தகவல்களும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் இடம்பெறக் கூடாது என்பது ஒன்றிய ஆட்சியினுடைய கொள்கை ரீதியான முடிவு என்று திட்டவட்டமாக இந்த மனுவில் ஒன்றிய ஆட்சி அறிவித்து விட்டது.

மகாராஷ்டிர மாநில அரசு மற்றொரு கோரிக்கையை தனது மனுவில் விடுத்திருந்தது. 2011ம் ஆண்டு சமூக பொருளாதார அடிப்படையிலும், ஜாதிய அடிப்படையிலும் ஒரு கணக்கெடுப்பு நாட்டில் நடத்தப்பட்டது. அந்த கணக்கெடுப்பு விவரங்களை யாவது இப்போது வெளியிட வேண்டும் என்று மகாராஷ்டிரா விடுத்த கோரிக்கையையும் ஒன்றிய அரசு இப்போது அதை வெளியிட முடியாது என்று நிராகரித்துவிட்டது. அதற்கு சொல்லுகிற காரணம் அப்போது நடத்தப்பட்டது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான கணக்கெடுப்பு அல்ல நாட்டின் சமூக பொருளாதார வாழ்க்கையில் ஒவ்வொரு ஜாதியினரும் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பு அந்த கணக்கெடுப்பை இப்போது வெளியிட்டால் அது இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் நேர்மைக்கே மிகப்பெரிய ஆபத்தை உருவாக்கிவிடும். எனவே அந்த தரவுகளை பயன்படுத்தவே கூடாது என்று நாங்கள் அப்படியே கிடப்பில் போட்டு விட்டோம் என்று ஒன்றிய ஆட்சி இப்போது பதில் கூறிவிட்டது.

ஆக இவர்கள் ஜாதிவாரி கணக்கெடுப்பை எடுத்து அதன் வழியாக எந்த மக்கள் எந்தெந்த வேலையில் இருக்கிறார்கள் என்பதை கண்டறிந்து அவர்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்களை உருவாக்குவதற்கு தயாராக இல்லை. ஆனால் ஜாதி அமைப்பு மட்டும் அப்படியே இருக்க வேண்டும் என்று இவர்கள் விரும்புகிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் ஜாதி சங்க தலைவர்களைப் பிடித்து ஜாதி வாக்குகளை இந்துத்துவ வாக்கு வங்கிகளாக மாற்ற வேண்டும் என்ற முயற்சிகளில் இவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சாதி ஒழிய வேண்டும் என்ற கொள்கையும் இவர்களிடம் கிடையாது. உயர் ஜாதிக்காரர்களுக்கு மட்டும் ஏழைகளாக இருந்தால் 10% இட ஒதுக்கீடு என்று அறிவிப்பார்கள். ஆனால் பிற்படுத்தப்பட்ட ஜாதிகளில் எண்ணிக்கையை கண்டறிந்து அவர்கள் எந்த நிலையில் சமூகத்தில், அரசியலில், பொருளாதாரத்தில் இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அதற்கான மேம்பாட்டு திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று சொன்னால் உண்மைகள் வெளிவந்துவிடும். ஆதிக்க சாதிகள், பார்ப்பனர்கள் மிகப் பெரிய எண்ணிக்கையில் உயர் பதவிகளை அபகரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை அம்பலமாகிவிடும் என்பதற்காக மக்கள் தொகை கணக்கெடுப்பில் இந்த பிற்படுத்தப்பட்டவர்களுடைய ஜாதி வாரியான கணக்கெடுப்பை இவர்கள் எடுப்பதற்கு தயங்குகிறார்கள். இந்த ரெட்டை வேடத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், ஜாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று நாடாளுமுன்றத்தில் அளித்த உறுதிமொழியை இப்போது அவர்களே கைவிட்டு விட்டார்கள்.

# தூக்கில் தொங்கிய மகான் நாட்டுக்கு சொல்வது என்ன?

தூக்குப்போட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டுவிட்டார் அலகாபாத் பாகம்பரி மடத்தின் தலைவர் 'நரேந்திர கிரி'. அவர் சாதரண மகான் அல்ல அரசியல் தலைவர்களுக்கெல்லாம் ஆசி வழங்கியவர். பிரதமர் நரேந்திர மோடியே இரங்கல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். உ.பி முதல்வர் ஆதித்யநாத் நேரில் சென்று அவரது உடலுக்கு மரியாதை செலுத்தியிருக்கிறார். தனது சீடர்கள் மூன்று பேரை குறிப்பிட்டு அவர்கள் தந்த குடைச்சலால் மன உளைச்சலுக்கு ஆளாகி விட்டேன் என்று, நரேந்திர கிரி எழுதிய கடிதம் ஒன்றும் கைப்பற்றப்பட்டு இருக்கிறது.

பல கோடி ரூபாய் சொத்துக்களை கொண்டது அவரது மடம். சில பாஜக புள்ளிகள் ஆட்டையப் போட நினைத்ததாலேயே மகான் இந்த முடிவுக்கு வந்துவிட்டார் என்று குற்றம் சாட்டுகிறது சமாஜ்வாடி கட்சி. கைது செய்யப்பட்ட மூன்று சீடர்களும், 'இது தற்கொலை அல்ல மரணத்தில் மர்மம் இருக்கிறது மாநில காவல்துறை விசாரிக்கக் கூடாது, உயர்நீதிமன்ற கண்காணிப்பில் விசாரணை நடத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

சொத்துப் பிரச்சனை மட்டுமல்ல பெண் பிரச்சனையும் இதில் வருகிறது. தன்னை, ஒரு பெண்ணின் படத்துடன் மார்ஃபிங் செய்து இணைத்து அதை வெளியிடப் போவதாக தனது சீடர்கள் மிரட்டியதாகவும் அப்படி ஒரு அவமானத்தை தாங்கிக் கொண்டு தான் உயிருடன் இருக்க முடியாது என்பதால்தான் இந்த முடிவை எடுத்ததாகவும் மகான் எழுதி வைத்த தற்கொலை கடிதம் கூறுகிறது. சரி பெண்ணுடன் இருக்கும் புகைப்படம் போலி என்றால் அதை அறிவியல் சோதனையில் கண்டுபிடித்து விடலாமே ? எதற்காக மகான் தூக்கில் தொங்க வேண்டும் என்று அறிவியலாளர்கள் கேட்கிறார்கள்.

வாழ்க்கைப் பிரச்சனை, அரசியல் நெருக்கடி, மன அழுத்தம் என்று பல்வேறு காரணங்களுக்காக சராசரி மனிதர்கள் நரேந்திர கிரியை நாடி வரும் நிலையில் மகானோ இதே பிரச்சனையில் தானும் சிக்கி தவித்துக் கொண்டிருந்திருக்கிறார். அனைத்தையும் துறந்து ஆன்மீகத்தின் உச்ச நிலைக்கு போக வேண்டிய மகான்கள் சராசரி மனிதர்களின் பிரச்சனைகளுக்குள்ளேயே உருண்டு கொண்டிருக்கிறார்களே இது தான் ஆன்மீகமா ?

தான் நம்பும் இறைவன் தனது நியாயத்தின் பக்கம் நிற்பான் என்று மகானே நம்பவில்லையா ? தவறு செய்த சீடர்களை, தான் நம்பும் இறைவன் தண்டிப்பான் என்ற நம்பிக்கையும் அவருக்கு இல்லையா ? நீதி மன்றம் தான் இவர்களை தண்டிக்க வேண்டுமென்று கடிதம் எழுதி வைத்துவிட்டு தூக்கில் தொங்க வேண்டுமா ? ஆக மகான்களே இறைவனை நம்பவுமில்லை ஆன்மீக வாழ்க்கையை வாழவும் இல்லை என்பதே நரேந்திர கிரி நாட்டு மக்களுக்கு தனது தற்கொலை வழியாக எடுத்து சொல்லியிருக்கிற செய்தி என்று நாம் நம்புவோமாக, கடவுளை புண்படுத்துகிறார்கள், மதத்தை புண்படுத்துகிறார்கள், ஆன்மீகத்தை இழிவுபடுத்துகிறார்கள் என்று கூச்சல் போடுவோருக்கு ஒரு கேள்வி மகான்களுக்கெல்லாம் தலைவரான மகான் நரேந்திர கிரியை இவற்றையெல்லாம் நம்பாமல் தூக்குக் கயிற்றையும்,தற்கொலை கடிதத்தையும் நீதி மன்ற தண்டனையையும் நம்பியிருக்கிறாரே இதற்கு என்ன பதிலை சொல்லப் போகிறீர்கள் ?

## வார்த்தையின் பேரில் வழக்காடத் தேவையில்லை



திராவிடர் – ஆரியர் என்று உடல்கூறு சாஸ்திரப்படி பரீட்சித்து அறிந்து பிரித்துப் பேசுவதாகக் கருதாதீர்கள். அல்லது திராவிடருக்கென்று ஏதோ தன்மைகளை எடுத்துச் சொல்லி அதை சரித்திர ஆதாரப்படி மெய்ப்பித்துச் சொல்லுவதாகக் கருதாதீர்கள். இவைகள் எப்படி இருந்தாலும், இவை பிரிக்க முடியாததாய் இருந்தாலும் சரி நம்மை இன்றைய இழிவிலிருந்து, தாழ்மையிலிருந்து முன்னேற முடியாமல் செய்யும் முட்டுக்கட்டையிலிருந்து மீண்டு தாண்டிச் செல்ல ஒரு குறிச்சொல் வேண்டும்.

ஆதலால் வார்த்தையின் பேரில் வழக்காடத் தேவையில்லை.

**குடி அரசு 14.07.1945**

# சுதந்திர நாளில் ‘ஹிட்லரின்’ கொடியை ஏற்றியது ஆர்.எஸ்.எஸ்.

*திராவிட இயக்கம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவானது என்றும், ஆர்.எஸ்.எஸ். தேச பக்தர்கள் இயக்கம் என்றும் சங்கிகள் பேசி வருவது வரலாற்றுப் புரட்டு.*

*ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வினர், பெரியார் இயக்கத் தின் மீது தொடர்ந்து ஒரு குற்றச் சாட்டைச் சுமத்து வது வழக்கமாகிவிட்டது. திராவிட இயக்கம், பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்தது அவர்கள். தேச விரோத சக்திகள் பிரிட்டிஷ் விசுவாசி என்று பேசி வருகிறார்கள். இது குறித்து இளைய தலைமுறைக்கு தெளிவான புரிதலை உருவாக்க சில வரலாற்றுக் குறிப்புகளை சுருக்கமாகப் பதிவிடுகிறோம்.*

விடுதலை இராசேந்திரன்

1942ஆம் ஆண்டிலிருந்து 1947ஆம் ஆண்டு வரை ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் பிரிட்டிஷாருக்கு ஆதரவாகவும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளை தீவிரப்படுத்துவதிலும் ஷாகாக்கள்; ஆபீசர் பயிற்சி முகாம்கள் நடத்துவதிலுமே தீவிர கவனம் செலுத்தி வந்தனர். நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ். தலைமைப் பீடம் 1945ஆம் ஆண்டில் துவக்கி, ஒரு ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்பட்டது. 1946ஆம் ஆண்டில் முகம்மது அலி ஜின்னா, முஸ்லீம்களுக்கு தனிநாடு கோரி, நேரடியான இயக்கத்தை நடத்த ஆரம்பித்தது இவர்களுக்கு மிகப் பெரிய வாய்ப்பாக அமைந்து விட்டது. முஸ்லீம் - இந்துக் கலவரங்கள், ஆங்காங்கே வெடித்துக் கிளம்பின. இந்தியாவில் ஒரு முஸ்லீம் சாம்ராஜ்யம் அமையப் போகிறது என்ற கற்பனைக் கதையை; இந்தக் கூட்டம் திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்து, இந்துக்களை முஸ்லீம்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டது.

1947ஆம் ஆண்டு பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேற போகிற காலம்; பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறிய பிறர் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நிலை என்ன? இந்தக் கேள்விக்கு அப்போது ஆர்.எஸ்.எஸ். வட்டாரத்தில் கிடைத்த பதில் ஒரே குழப்பம்தான்! அதுவரை பிரிட்டிஷாருக்கு முழு ஆதரவு தந்து, முஸ்லீம்களுக்கு எதிரான யுத்தத்தை நடத்தி வந்தவர்கள் சுதந்திர இந்தியாவில் தங்களின் நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி தெரியாமல் குழம்பிப் போய்க் கிடந்தனர்.

பஞ்சாப் மாநிலத்தில் பக்வாரா என்ற இடத்தில் 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் ஆர்.எஸ்.எஸ். அதிகாரிகள் பயிற்சி முகாம் ஒன்று நடந்தது. அந்தப் பயிற்சியின் நிறைவு விழாவில், ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கரிடம் இதே கேள்வியை நேரிடையாகவே கேட்கப் பட்டது. ‘இந்தியா இப்போது சுதந்திர நாடாக மாறப் போகிறது இப்போது ஆர்.எஸ்.எஸ். எப்படி செயல் படப் போகிறது?’ என்ற நேரடியான கேள்வியை கோல்வாக்கரிடம் கேட்கப்பட்ட போது, கோல் வாக்கர் வாய் விட்டு பலமாக குலுங்கி குலுங்கி சிரித்து விட்டுச் சொன்னார்.

பிரிட்டிஷார் வெளியேறுவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா? இந்த அறிவில்லாக் கூட்டத்தாரிடம், பேதைகளிடம் ஆட்சியைக் கொடுத்தால் இரண்டு மாதங்கள்கூட இவர்களால் சமாளிக்க முடியாது. இவர்கள் மீண்டும் பிரிட்டிஷாரிடம் மண்டியிட்டு, தயவு செய்து ஆட்சியை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி விடுவார்கள். எனவே ஆர்.எஸ்.எஸ். அதன் பணியைத் தொடர்ந்து செய்து கொண் டிருக்கும் என்று பதிலளித்தார்.

(ஆதாரம்: டி.ஆர். கோயல் எழுதிய ஆர்.எஸ்.எஸ். நூல் பக்கம் 9)

அதே நேரத்தில் ஆர்.எஸ்.எஸ்.இன் நெருக்கமான வட்டாரங்களில் இன்னொரு கருத்தும் பேசப்பட்டு வந்தது. பிரிட்டிஷார், நாட்டை ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கையிலே தந்து விட்டுப் போகப் போகிறார்கள்; அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று அவர்கள் பேசினார்கள் காரணகாரியங்களின் அடிப்படையில் விவாதம் என்பதற்கு அந்த முகாமின் வரலாற்றில் எந்தக் காலக் கட்டத்திலும் இடம் இருந்ததில்லை.

இதுபற்றி பண்டிட் ஹேமேந்திரநாத் என்ற முன்னாள் ஆர்.எஸ்.எஸ்.காரர் ஒருவர் குறிப்பிடுகிறார், ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளில் ஒன்றான அகில பாரதிய பிரதிநிதிசா என்ற அமைப்பில் உறுப்பினராக இருந்து, பிறகு அதிலிருந்து வெளியேறியவர் ஹேமேந்திரநாத் அவர் ‘The end of a dream; An inside view of the R.S.S. Today’ என்ற ஒரு நூலை எழுதியிருக்கிறார். அந்த நூலில் 44ஆவது பக்கத்தில் அவர் எழுதியிருப்பதை இங்கே எடுத்துக்காட்டுகிறோம்:

டில்லி ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு தலைவராக இருந்தவர் லாலா ஹன்ஸ் ராஜ் குப்தா. இந்திய தலைநகரத்தில் நடக்கும் அரசியல் நடவடிக்கைகள் பற்றி கவனித்து முடிவெடுக்க வேண்டிய முழு பொறுப்பும், இவருக்கு அளிக்கப்பட்டிருந்தது. அவர் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கூட்டத்திலே சில கட்டுக் கதைகளை எடுத்துச் சொன்னார். மத்திய இடைக்கால ஆட்சியில் இருக்கும் (காங்கிரஸ்) தலைவர்களால் அரசாங்கத்தை நடத்த முடியாது; எனவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பிடமே, இந்தியாவை ஒப்படைத்து விடுவது பற்றி பிரிட்டிஷார் தீவிரமாக பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். எனக்கு இது பற்றி நம்பிக்கையான தகவல்கள் மேலிடத்திலிருந்து கிடைத்துள்ளது. ஒரு மாதத்துக்குள்ளோ அல்லது இரண்டு வாரத்துக்குள்ளோ இந்த அறிவிப்பு வெளியாகும் என்று அவர் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நடத்திய இரகசிய கூட்டத்திலே எடுத்துச் சொன்னார். இந்தச் செய்தி கோல்வாக்கரிடம் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

- *பெரியார் சுதந்திர நாளை துக்க நாள் என்று நேர்மையாக அறிவித்தார்; அவரை ‘தேச துரோகி’ என்று குற்றம் சாட்டும் ஆர்.எஸ்.எஸ். அதே நாளில் ஹிட்லரின் காவிக் கொடியை ஏற்றியது.*
- *பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவை தங்களிடம் ஒப்படைக்கப் போவதாக நம்பிக் கொண்டிருந்தது ஆர்.எஸ்.எஸ்.*

பெரியார், தனது கருத்தை வெளிப்படையாக அறிவித்தார். இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்திரம், பார்ப்பன-பனியாக்களுக்குத்தான்; அதிகாரம் ‘மேட் ஓவர்’ செய்யப்பட்டுள்ளது என்று கூறி துக்க நாள் என்று வெளிப்படையாக நேர்மையாக அறிவித்தார். அதற்காக பெரியாரை தேச துரோகி என்று முத்திரைக் குத்தி வரும் சங்பரிவாரங்கள் அந்த நேரத்தில் கபட நாடக மாடினார்கள்.

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி, அதாவது இந்தியாவுக்கு சுதந்திரம் வந்த அந்த நாளில் இவர்கள் என்ன செய்தார்கள்?

நாடெங்கும் மூவர்ண தேசியக் கொடி ஏற்றப் பட்ட அந்த நாளில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நடத்திய நாடகம் என்ன? நாட்டுப் பற்றுக்கும் தேச பக்திக்கும் தாங்களே பிறப்பெடுத்தவர்கள் என்று மார்தட்டிக் கொள்வதால் இதை நாம் சுட்டிக்காட்டிக் கேட்கி றோம்.

இதோ பரபரப்பான ‘Freedom at Midnight' என்ற நூலிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக் காட்டுகிறோம்:

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி, பூனா நகரத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அங்கும் கொடிதான் ஏற்றப்பட்டது; ஆனால் அது சுதந்திர இந்தியாவின் தேசியக் கொடி அல்ல; அது காவிக் கொடி, 500 ஆண்கள் அந்த இடத்திலே திரண்டிருந்தனர் அய்ரோப்பாவையே நடுங்க வைத்த ஹிட்லரின் ஸ்வஸ்திக் கொடியைத்தான் அங்கே ஏற்றினார்கள்.

ஹிட்லர் கொடியிலிருந்து மிகச்சிறிய மாற்றம் மட்டுமே அதில் செய்யப்பட்டிருந்தது. அந்தக் கொடியில் பொறிக்கப்பட்டிருந்தது ஆரியச் சின்னம். அங்கே கூடியிருந்தவர்கள் R.S.S.என்ற வகுப்புவாத பாசிச அமைப்பைச் சார்ந்தவர்கள்’ என்று அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நாடெங்கும் தேசியக் கொடி உயர்ந்த அந்த நாளில் ஆரியக்கொடியை ஏற்றிய கூட்டம் தான் இந்த ஆர்.எஸ்.எஸ். கூட்டம்!

ஆம்! காந்தியாரை சுட்டுக்கொன்ற அதே நாதுராம் கோட்சே தான் அன்றைய தினம் (1947 ஆகஸ்ட் 15இல்) ஆர்.எஸ்.எஸ்.காரர்களோடு சேர்ந்து கொண்டு ஆரியக் கொடியை ஏற்றியவர்!

அந்தக் கோட்சே ஒரு பத்திரிகையின் ஆசிரியர். அந்த பத்திரிகையின் பெயர் ‘Hindu Rashtra’ என்ப தாகும்.

“சுதந்திர நாளில் அந்தப் பத்திரிகையின் தலையங்கப் பகுதி, கறுப்பு மய்யினால் நிரப்பப்பட்டு வெளியே வந்தது.

ஆரியக் கொடி ஏற்றியபோது, முன் வரிசையிலே நின்று கொண்டிருந்த நாதுராம் கோட்சே உணர்ச்சி வசப்பட்டு அலறுகிறான்! ‘இந்துக்கள் கொலை செய்யப்படுகிறார்கள்; இந்துப் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள்; இதை மறைப்பதற்கே சுதந்திரம் பேசுகிறார்கள் இத்தனைக்கும் காரணம் காங்கிரஸ்தான்; எல்லாவற்றிற்கும் மேலாக காந்திதான்’ என்று கோட்சே அப்போது அலறுகிறான். (ஆதாரம் மேற்குறிப்பிட்ட அதே நூல்) உடனே நாதுராம் கோட்சே, 500 தொண்டர்களோடு சேர்ந்து ஆரியக் கொடிக்கு சல்யூட்’ செய்கிறான், குனிந்து தரையைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு, “என்னை வளர்த்த தாய் நாடே, உனக்காக எங்கள் உடல் சாகத் தயார்” என்று பிரகடனப் படுத்துகிறான்.

அதற்குப் பிறகு 5 மாதங்களில் 1948 ஜனவரி 30இல் அதே நாதுராம் கோட்சே என்ற பார்ப்பனரால் காந்தியார் சுட்டுக் கொல்லப் படுகிறார்

(தொடரும்)

## கோபி இராம. இளங்கோவன் நன்கொடை

கழக ஏட்டுக்கு மாதம் ரூ.10,000 அனுப்பி வரும் கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி. இராம. இளங்கோவன் 5ஆவது தவணையாக ரூ.10,000 அனுப்பியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

## மு. சுபைதா – ரா.வி. சூரியநாராயணன் இணையர் நன்கொடை

சென்னை மாவட்டம் சார்பில் 17.09.2021 அன்று சமூக நீதி நாள் கொண்டாட்டத்தின் போது, இராயப்பேட்டை வி.எம்.தெரு பெரியார் படிப்பகத்தின் அருகில் அமைக்கப்பட்டிருந்த மேடையில், மு. சுபைதா – ரா.வி. சூரியநாராயணன் இணையரின் மதமறுப்பு சுயமரியாதை திருமணம் நடைபெற்றது. இணையர் கழக ஏட்டிற்கு ரூ. 1500 நன்கொடை வழங்கியுள்ளனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY  TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM  REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகம் முன்னெடுத்த சமூகநீதி நாள் கொண்டாட்டங்கள்

**நாமக்கல்** மாவட்டம் குமாரபாளையத்தில் பெரியாரின் 143-வது பிறந்தநாள் விழா 17.09.2021 அன்று காலை 10 மணியளவில், மாவட்டக் காப்பாளர் மு.கேப்டன் அண்ணாதுரை தலைமையில், நகரத் தலைவர் மீ.த.தண்டபாணி, திராவிடமணி முன்னிலையில், காவேரி நகரில் தந்தை




பெரியாரின் பிறந்தநாள் வாழ்த்து அட்டையும், இனிப்பும் வழங்கப் பட்டது. புதிய பாலம் அருகில் பொன்மொழி வாசக பலகையை வடிவேல் திறந்து வைக்க, ரேணுகா கொடியேற்ற இனிப்புகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. பேருந்து நிலையத்தில் தேவி கொடியேற்றினார். பெருந் தலைவர் காமராசர் சிலைக்கு பள்ளி மாணவி ஈழக்கனிமலர் மாலை அணிவித்தார். அறிஞர் அண்ணா சிலைக்கு பள்ளி மாணவி சங்கத்தமிழ் மாலை அணிவித்தார். மணியம்மை அனைவருக்கும் வாழ்த்து அட்டையும், இனிப்பும் வழங்கினார். தந்தை பெரியார் படிப்பகத்தில் பெரியாரின் உருவப் படத்திற்கு, சந்திரா மாலை அணிவித்தார். வாழ்த்து அட்டையும், இனிப்பும் தண்டபாணியின் தாயார் செல்வி ஆச்சி அம்மாவும், இலக்கியாவும் வழங்கினார்கள். பின்னர், குமாரபாளையம் சமத்துவபுரத்திலுள்ள பெரியாரின் சிலைக்கு அனைவரின் முன்னிலையில் பெரியார் பிஞ்சுகள், குலசேகர கோமகன் மாலை அணிவித்து இனிப்பு வழங்கினார்.

பின்னர் அனைவரும் மினி பேருந்தில், பள்ளிபாளையம் பகுதி ஒட்டமெத்தை, ஆவாரங்காடு, கோவிலங்காடு, பள்ளிபாளையம் பேருந்து நிலையம் பகுதியில் தந்தை பெரியாரின் பிறந்தநாள் உறுதி மொழியை, தீண்டாமை ஒழிப்பு முன்னணி அசோகன் வாசிக்க அனைவரும் ஒன்றிணைந்து கூறினோம். பள்ளிபாளையம் பகுதியில் நடைபெற்ற அனைத்து நிகழ்வும் தமிழ் புலிகள் மற்றும் திவிக இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. திவிக மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி, மாவட்ட செயலாளர் சரவணன், தலைமையில் தமிழ் புலிகள் தோழர் மக்கள் அதிகாரம் அமைப்பு தோழர்கள் அனைவரும் இணைந்து பள்ளிபாளையம் பகுதியில் ஒரு மினி பேருந்து ஏற்பாடு செய்து, இரண்டு வாகனத்தில் புறப்படும் முன்பு பள்ளி பாளையத்தில் தேநீர், பழகாரம் அனைத்து தோழர்களுக்கும் வழங்கப் பட்டது.

பின்னர் இரண்டு வாகனத்திலும் தோழர்கள் சங்ககிரி சென்று திவிக அமைப்பாளர் வழக்கறிஞர் வித்யாபதி தலைமையில் செந்தில் முன்னிலையில் அனைவரையும் வரவேற்று, சங்ககிரி பழைய பேருந்து நிலையம் அருகில் பெரியார் உருவப்படம் மலர்களால் அலங்கரித்து பந்தல் போடப்பட்டு சிறப்பான ஏற்பாடு செய்திருந்தனர். பெரியார் பிஞ்சுகளுக்கு புத்தகம், வாய்ப்பாடு, கலர் பென்சில்கள் வழங்கி சிறப்பு செய்தனர். கேப்டன் அண்ணாதுரை, வழக்கறிஞர் வித்யாபதி உரை நிகழ்த்த, மோகன், வடிவேல் முழக்கமிட்டு உறுதிமொழி கூறினார்கள். அனைத்து தோழர்களுக்கும் மதிய உணவாக பிரியாணி வழங்கப்பட்டது. வழக்கறிஞரின் உதவியாளரும், செந்தில் குடும்பத்தாரும் அனைவருக்கும் நன்றி கூறி வழியனுப்பி வைத்தனர்.

திருச்செங்கோடு நகரச் செயலாளர் பூபதி, கோழிக்கடை சுப்பு, யாத்ரா, கார்த்தி, சோமசுந்தரம், விஜய் ஆகிய தோழர்களுடன் மல்லசமுத்திரம் பகுதியில் நடந்து கொண்டிருக்கும் நவீன தீண்டாமையை சட்டப்படி நடவடிக்கை எடுக்க திருச்செங்கோடு தாசில்தாரிடம் மனு அளிக்கப் பட்டது. பாதிக்கப்பட்ட பகுதி மக்களுடன் காளிப்பட்டி பெரியண்ணன் உடன் இருந்தார். மாலை 5 மணிக்கு இராசிபுரம் சென்று, இராசிபுரத்தில் நகர செயலாளர் பிடல் சேகுவேரா அனைவரையும் வரவேற்று தேநீர் வழங்கி பின்னர் சுமதி தலைமையில் பெரியாரின் 143 ஆவது பிறந்தநாள் கொடிமரத்தில் குமாரபாளையம் பரிமளம் கொடியேற்றி வைக்க திமுக பிரமுகர் பாலு உள்பட சமூக ஆர்வலர் பல்வேறு கட்சி அமைப்புகளை சார்ந்த தோழர்கள் பலரும் இணைந்து 25 மாற்று திறனாளிகளுக்கு அரிசி, காய்கறிகள், கோரோனா நிவாரண உதவியாக தந்தை பெரியாரின் பிறந்த நாளில் வழங்கியது குறிப்பிடத்தக்கது. இரவு உணவாக அனைவருக்கும் திருச்செங்கோடு தம்பி தேநீர் விடுதி உரிமையாளர் சோமசுந்தரம் ஏற்பாடு செய்து கொடுத்தார்.

அனைத்து பகுதிகளிலும் தோழர் கார்த்தி, காணொளி, புகைப்படம் எடுத்து சிறப்பு செய்தார். குமாரபாளையம் பகுதித் தோழர்கள் முருகாண்டி, செல்வம், செல்வராசு, மு.சாமிநாதன், பழனியப்பன், புகழேந்தி, மாதேசுவரன் மற்றும் பெரியார் பிஞ்சுகள் பள்ளி பாளையம் பகுதி பிரகாசு, சங்கர், தியாகு, தம்பிதுரை, குப்புசாமி, நாகராஜ், தமிழ் புலிகள் தோழர்கள் அழகேசன், புரட்சிகர இளைஞர் முன்னணி மாணிக்கம், மக்கள் அதிகாரம் மோகன், திருச்செங்கோடு விஜய், காளிப்பட்டி பெரியண்ணன், பள்ளிபாளையம் பெரியார் பிஞ்சுகள் மற்றும் ஆதரவாளர்கள், தோழர்கள் தந்தை பெரியாரின் பிறந்தநாளை சமூகநீதி நாளாக அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைப் பாராட்டி வாழ்த்து தெரிவித்து வாழ்த்து அட்டை 1000 அச்சிட்டு சென்ற பகுதிகளுக்கெல்லாம் தோழர் களால் வழங்கப்பட்டது.

**கோவையில்:** திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் லோகு தலைமையில், காந்திபுரம் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, நிலா உறுதிமொழிகூற அனைத்து தோழர்களும் உறுதி மொழி ஏற்றனர்.

காந்திபுரம் சித்தாபுதூர், பகுதியில் கழகத் தோழர் லோகு மற்றும் நண்பர்கள், பகுதி மக்கள் இணைந்து ஏற்பாடு செய்த பெரியார் படத்திற்கு மலர்தூவி இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. நிகழ்வை நாடாளு




மன்ற உறுப்பினர் நடராஜன் கலந்து கொண்டு சிறப்பித்தார்

பீளமேடு AD காலனியில், கிருஷ்ணன் தலைமையில் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி அந்தப் பகுதி மக்களால் கொண்டாடப்பட்டது.

கிணத்துக்கடவு அருகே வடபுதூர், கிராமத்தில் தோழர் இராமகிருஷ்ணன் தலைமையில் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

பெரியார் பிறந்தநாளை சமூகநீதி நாளாக அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிக்கும் விழா கோட்டூர் பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் இருந்து தொடங்கியது, இந்நிகழ்வில் கோவை மாவட்ட கழகச் செயலாளர் யாழ். வெள்ளிங்கிரி, ஆனைமலை நகரச் செயலாளர் அரிதாசு, தமிழ்நாடு மாணவர் கழகம் வினோதினி, திமுக ஊராட்சி மன்றத் தலைவர் அண்ணாதுரை, வெல்ஃபேர் பார்ட்டி சார்பாக மணிமாறன் மற்றும் கழகத் தோழர்கள் மணி, சிவா, நடராசு, கணேசு உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண் டனர்.

அடுத்து ஆனைமலையில் பெரியார் 143ஆவது பிறந்த நாள் விழா ஆனைமலை நகர கழகச் செய லாளர் அரிதாசு தலைமையில் நடைபெற்றது, இந்நிகழ்வில் கோவை மாவட்ட கழகச் செயலாளர் யாழ். வெள்ளிங்கிரி, வெல்ஃபேர் பார்ட்டி சார்பாக மணிமாறன், தமிழ்புலிகள் கட்சி சார்பாக ரேட் காளி உள்ளிட்ட தோழர்கள் கருத்துரையாற்றினர்.

இதில் தமிழ்நாடு மாணவர் கழகம் வினோதினி, மணி, சிவா, நடராசு, கணேசு உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

சூலூர், சின்னியம்பாளையம், அரசூர், பெரியார் நினைவு சமத்துவ புரம் பகுதிகளில் பெரியார் பிறந்த நாள் விழா மாலை அணிவித்து உறுதி மொழி ஏற்று நிகழ்வுகள் நடை பெற்றது.

கலந்து கொண்ட தோழர்கள் சூலூர் பன்னீர் செல்வம், தமிழ் செல்வி, வீரமணி, கார்த்திகேயன், ராஜி, வழக்கறிஞர் சரவணகுமார், ஓவியா, சூலூர், முனியப்பன், நீலம்பூர் தங்கராசு, சின்னியம்பாளையம் மொபைல் சிவா, லோகேஷ், வழக்கறிஞர் விஷ்ணு, பாபு ஆட்டோ நண்பர்கள் மூன்று பேர் மற்றும் உணர் வாளர்கள் கலந்து சிறப்பித்தனர்கள்.

**பொள்ளாச்சியில் :** திராவிடர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பாக கா.க.புதூரில் தலைவர் தந்தை பெரியாரின் 143ஆவது பிறந்தநாள் விழா தோழர்கள் சக்திவேல், கார்த்திக் தலைமையில் கொண்டாடப்பட்டது, இதில் தமிழ்நாடு திராவிடர் கழகம் வழக்கறிஞர் பிரபாகரன், தமிழ்நாடு மாணவர் மன்றம் பிரசாந்த், திராவிடர் விடுதலைக் கழகம் சபரி கிரி தமிழ்நாடு மாணவர் கழகம் திராவிட முருகன் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திராவிடர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பாக தலைவர் பெரியாரின் 143ஆவது பிறந்தநாள் விழா பொள்ளாச்சியில் திராவிடர் கழக பொதுக் குழு உறுப்பினர் பரமசிவம் தலைமையில் நடை பெற்றது. இதில் திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட செயலாளர் யாழ். வெள்ளிங்கிரி, மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் மாரிமுத்து, தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பாக வினோதினி, திராவிடர் விடுதலைக் கழக ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சபரிகிரி, தமிழ்நாடு திராவிடர் கழகம் ம.கார்த்திக், தமிழ்நாடு மாணவர் மன்றம் கீதா ஆகியோர் கருத்துரை யாற்றினர். இதில் திவிக, திக, ததிக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இதனையடுத்து ஆலாம்பாளையத்தில் தலைவர் தந்தை பெரியாரின் 143ஆவது பிறந்தநாள் விழா வீரமலை தலைமையில் நடைபெற்றது. இதில் திராவிடர் கழக பொதுக்குழு உறுப்பினர் பரமசிவம், திராவிடர் விடுதலைக் கழக கோவை மாவட்ட செயலாளர் யாழ் வெள்ளிங்கிரி, தமிழ்நாடு மாணவர் கழகம் வினோதினி, தமிழ்நாடு திராவிடர் கழகம் கார்த்திக், தமிழ்நாடு மாணவர் மன்றம் கீதா, இதில் திராவிடர் இயக்க கூட்டமைப்பு தோழர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

வட சித்தூர் பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து சமூகநீதி நாள் உறுதிமொழியை எடுத்துக் கொண்டோம். மதியம் அனைத்து தோழர் களுக்கும் மாட்டிறைச்சி உணவு வழங்கிய பின்பு நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP  Posted: 30th September 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN